# மெட்ரோ ரயில் நிலையங்களுக்கு இயக்கப்படும் ஷேர் ஆட்டோ, டாக்சி கட்டணம் குறைப்பு

சென்னை

மெட்ரோ ரயில் நிலையங்களுக்கு இயக்கப்படும் ஷேர் ஆட்டோ மற்றும் ஷேர் டாக்சி கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

பொதுமக்கள் மெட்ரோ ரயில் நிலையங்களுக்கு வந்து பயணம் செய்யும் வகையில் பல்வேறு அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்கிடையே, பல்வேறு குடியிருப்பு பகுதிகளை மெட்ரோ ரயில் நிலையங்களுடன் இணைக்கும் வகையில் கால்டாக்சி, ஷேர்டாக்சி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கிண்டி, திருமங்கலம், ஆலந்தூர், ஈக்காட்டுத்தாங்கல், சின்னமலை, கோயம்பேடு, பரங்கிமலை, அசோக்நகர் மெட்ரோ ரயில் நிலையங்களில் ஷேர் ஆட்டோ வசதியும், டிஎம்எஸ், அண்ணாநகர் கிழக்கு, கோயம்பேடு, ஆலந்தூர், வடபழனி ஆகிய மெட்ரோ ரயில் நிலையங்களில் ஷேர் டாக்சி வசதியும் உள்ளது.

குறைந்தபட்ச கட்டணமாக ஷேர் ஆட்டோவில் ஒருவருக்கு ரூ.10 எனவும், ஷேர் டாக்சியில் ஒருவருக்கு ரூ.15 என கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது. இவற்றில் தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் பயணம் செய்து வருகின்றனர். இதற்கிடையே, மெட்ரோ ரயில்களில் மேலும் பயணிகளை ஈர்க்கும் வகையில் மெட்ரோ ரயில் நிலையங்களுக்கு இயக்கப்படும் ஷேர் ஆட்டோ, ஷேர் டாக்சிகளில் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. அதாவது, ஷேர்ஆட்டோ கட்டணம் ரூ.10-ல் இருந்து ரூ.5 ஆகவும், ஷேர் டாக்சிகளில் ரூ.15-ல் இருந்து ரூ.10 ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது. இந்த கட்டண சலுகை ஜனவரி வரையில் அளிக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.